நாள்: 06.07.2026
OS. 231/2020
பெயர் மணிகண்டன்
வா.சா.2

<u>குறுக்கு விசாரணை</u>

என்னுடைய தகவலின் அடிப்படையில் தான் முதல் விசாரணை வாக்குமூலம் தயார் செய்யப்பட்டது. நான் M.E. பட்டதாரி. நான் சென்னையில் ஒரு தனியார் நிறுவனத்தில் 4 வருடங்களாக வேலை பார்த்து வருகிறேன். இவ்வழக்கு வாதி மனோகரன் என் தந்தை என்றால் சரிதான். என் தந்தைக்கும், பிரதிவாதியும் எப்படி பழக்கம் என்றால் இரண்டு பேரும் ஒரே போக்குவரத்து கழகத்தில் வேலை பார்த்தார்கள். அதன் மூலமாக பழக்கம். அவர்களுக்குள் எத்தனை ஆண்டுகள் பழக்கம் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. செல்வக்குமார் எந்த வருடம், எந்த மாதம், எந்த தேதியில் என் தந்தையிடம், வழக்கு சொத்தை கிரையம் வாங்க வற்புறுத்தினார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கிரைய ஒப்பந்த தேதி தான் தெரியும்.

பிரதிவாதி என் தந்தையிடம் ரூ.5,50,000/− த்திற்கு வழக்கு சொத்தை கிரையம் பேசி ரூ.5,00,000/− 04.09.2018 ல் முன்பணம் கொடுத்தார். அதை பிரதிவாதி பெற்றுக்கொண்டார். கிரைய ஒப்பந்தத்தை தவிர 5 லட்சம் பணம் பெற்றுக் கொண்டதற்கு வேறு ஆவணம் பிரதிவாதி எழுதிக்கொடுக்கவில்லை. பிரதிவாதி, என் தந்தைக்கு இதுவரை எந்த தொகையும் கொடுக்கவில்லை. கிரைய ஒப்பந்தத் தேதியில் என் தந்தை நல்ல பொருளாதார நிலையில் தான் இருந்தார். உண்மையில் பிரதிவாதியிடம் கிரையம் வாங்கவேண்டும்என ஒப்பந்தம் ஏற்பட்டிருந்தால் கிரைய ஒப்பந்தத் தேதியிலேயே பாக்கி கிரைய தொகை 50 ஆயிரத்தை கொடுத்து கிரையம் முடித்திருப்பார் என்றும், ஆனால் அந்த தேதியில் கிரையம் முடிக்காததலிருந்து கிரையம் முடிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தபடவில்லை என்றால் சரியல்ல. 50 ஆயிரம் மீதிக்கிரைய தொகைக்கு 2 ஆண்டு காலம் அவகாசம் என்பது ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

என் தந்தைக்கும், பிரதிவாதிக்கும் இடையே பணம் கொடுக்கல் வாங்கல் இருந்தது என்றும், அதற்கு ஆதரவாக எழுதிக்கொடுக்கப்பட்டது தான் இந்த வழக்கு கிரைய ஒப்பந்தம் என்றால் சரியல்ல. என் தந்தை தாக்கல் செய்துள்ள பொய் வழக்கிற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

M SHIVAJI CHELLIAH
Digitally signed by M SHIVAJI CHELLIAH

சார்பு நீதிபதி
உத்தமபாளையம்